DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP No. | : | 142/2019 |
| Deposition of Witness for | : | P.W. |
| | : | D.W. |
| | : | R.W.1 |
| | : | Court. |
| Name | : | பன்னீர்செல்வம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.06.2025

**முதல் விசாரணை:**

நான் நியு இந்தியா அஸ்சூரன்ஸ் மதுரை கிளையில் முதுநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அங்கு பணிபுரிவற்காண அடையாள அட்டை வைத்துள்ளேன். **அந்த அடையாள அட்டை நகல் சா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆவிபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கையில் அடையாளம் தெரியாத வாகனம் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் தான் விபத்து ஏற்பட்டதாக தெரியவருகிறது. ஆகையால் இந்த மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க எங்கள் நிறுவனம் கடமைப்பட்டது அல்ல. இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் சேக் மீரா உசைன் ஓட்டி வந்தார். அந்த வாகனத்தின் உரிமையாளர் அவர்தான். இருசக்கர வாகனத்திற்கான இன்சூரன்ஸ் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **அந்த காப்புறுதிச் சான்று நகல் சா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்தில் மோதிய வாகனம் எந்த வாகனம் என்பது தெரியவில்லை எனபதால் நாங்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

**குறுக்கு விசாரணை**

1. மனுதாரர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் பதிவு எண். டிஎண்.65S4434 என்றால் சரிதான். அந்த வாகனம் எங்களுடைய காப்பீட்டு நிறுவனத்தில் காப்புறுதிச் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த இன்சூரன்ஸ் பாலிசியில் வாகனத்தின் உரிமையாளர் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்து நடந்தால் ரூ. 15 லட்சம் வரை இழப்பீடு தொகை கிடைக்கும் வகையில் காப்பீட்டு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, ஏனென்றால் விபத்தில் அந்த மனுதாரர் இறந்து இருக்க வேண்டும் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டு இருந்தால் 50 சதவீதம் இழப்பீடு கிடைக்க தக்க வகையில் இருக்கும், மேலும் பிரிவு 163 ஏ என்ற பிரிவின் கீழ் தான் இழப்பீடு கோரமுடியும்.

2. பொதுவாக இன்சூரன்ஸ் பாலிசி என்பது ஓட்டுநர் மற்றும் உரிமையாளரின் தனிப்பட்ட விபத்து மற்றும் பிற நபர்களுக்கு ஏற்படும் விபத்து சம்பந்தப்பட்டே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மோட்டார் வாகனச் சட்ட விதிகளுக்கு அது உட்பட்டது. மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும் நான் உண்மைக்கு புறம்பாக சம்பவங்கள் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.